## September 2, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. ஈரோடு மாவட்டம் எலத்தூர் ஏரியை மாநிலத்தின் 3-ஆவது பல்லுயிர் பாரம்பரியத் தலமாக தமிழக அரசு அறிவித்துள்ளது.
   i. உயிரியல் பன்மைச் சட்டத்தின் கீழ், கடந்த 2022-ஆம் ஆண்டு மதுரை மாவட்டம் அரிட்டாபட்டியும், கடந்த மார்ச் மாதத்தில் திண்டுக்கல் மாவட்டம் காசம்பட்டியும் பல்லுயிர் பாரம்பரியத் தலமாக அறிவிக்கப்பட்டன. அதன் தொடர்ச்சியாக ஈரோடு மாவட்டத்திலுள்ள எலத்தூர் ஏரி மாநிலத்தின் 3-ஆவது பல்லுயிர் பாரம்பரியத் தலமாக அறிவிக்கப்பட்டுள்ளது.
   ii. எலத்தூர் ஏரியை பல்லுயிர் பாரம்பரியத் தலமாக அறிவிப்பதன் மூலம், அதன் உயிரினங்கள் மற்றும் வாழ்விடங்களின் செழுமையைப் பாதுகாக்க முடியும்.
   iii. எலத்தூர் ஏரி சுமார் 37 ஹெக்டருக்கும் அதிகமான பரப்பளவு கொண்டது. இது பல்வகைப் பறவைகள், நீர்வாழ் உயிரினங்கள் மற்றும் பல்வகை ஈரநிலை அமைப்புகளுக்கு முக்கிய வாழ்விடமாக உள்ளது. இங்கு புலம்பெயரும் காலங்களில் சுமார் 5,000-க்கும் மேற்பட்ட பல்வகைப் பறவைகள் காணப்படும். இதுவரை 187 வகையான பறவைகள் இங்கு கண்டயறிப்பட்டுள்ளன.
   iv. அழிந்துவரும் உயிரினங்களான நதிக்காக், பெரிய புள்ளி கழுகு ஆகிய பறவைகளையும், கம்பளகழுத்து நாரை, ஓவிய நாரை, கிழக்கு நீர்த்தாரை ஆகியவற்றையும் பாதுகாக்கும் இடமாக இது உள்ளது.
   v. மேலும் 38 தாவர வகைகள், 35 பட்டாம்பூச்சி வகைகள், 12 வகை ஊர்வனங்கள், 7 வகை பாலூட்டிகள் உள்ளிட்ட உயிரினங்களுக்கும் இந்த ஏரி வாழ்விடமாக விளங்கி வருகிறது.

2. ஐரோப்பிய ஆணையத் தலைவர் உர்சுலா வொன் டெர் லெயனின் விமானத்தின் ஜிபிஎஸ் சிக்னல் பல்கேரியாவில் முடக்கப்பட்டதாகவும், இதற்கு ரஷியா காரணமாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.
   i. ரஷியா, பெலாரஸை ஒட்டிய ஐரோப்பிய யூனியன் நாடுகளில் நான்கு நாள் சுற்றுப்பயணம் மேற்கொள்ள உர்சுலா விமானத்தில் புறப்பட்டார். பல்கேரியாவின் பிளோவ்டிவ் விமான நிலையம் அருகே விமானத்தின் ஜிபிஎஸ் சிக்னல் திடீரென முடக்கப்பட்டது. இருப்பினும், விமானம் பிளோவ்டிவ் விமான நிலையத்தில் பாதுகாப்பாக தரையிறங்கியது. அங்கிருந்து திட்டமிட்டபடி உர்சுலா தனது சுற்றுப் பயணத்தைத் தொடருவார் என்று ஆணையத்தின் செய்தித் தொடர்பாளர் அரியானா பொடெஸ்டா தெரிவித்தார்.
   ii. இந்தச் சூழலில், உர்சுலா வொன் டெர் லெயன் வெளியிட்ட அறிக்கையில், ‘இந்த சம்பவம் ரஷியாவும் அதன் கூட்டாளிகளும் ஐரோப்பிய நாடுகளுக்கு அச்சுறுத்தல் விடுப்பதை உறுதிப்படுத்துகிறது. இதனால், ஐரோப்பிய யூனியன் பாதுகாப்பு செலவுகளை அதிகரிக்கவும்,

தயார் நிலையை மேம்படுத்தவும் தொடர்ந்து முதலீடு செய்யும்.

3. கடந்த 2024-25-ஆம் நிதியாண்டில் ரூ.8.81 லட்சம் கோடிக்கும் அதிகமான மதிப்பு கொண்ட சரக்குகளை சீனாவில் இருந்து இந்தியா இறக்குமதி செய்தது. இருநாடுகளுக்கு இடையிலான எல்லை பிரச்னை முழுமையாக முடிவுக்கு வராவிட்டாலும், இந்த வர்த்தகம் தொடர்ந்து அதிகரித்து வருகிறது.
    i. செமிகண்டக்டர் தயாரிப்புக்குப் பயன்படுத் தப்படும் சிலிகான் வேஃபர்கள், எம்பிராய் டரி இயந்திரங்கள் உள்ளிட்டவற்றை இறக்கு மதி செய்வதில் இந்தியா கிட்டத்தட்ட 100 % சீனாவை சார்ந்துள்ளது.
    ii. அறிதிறன்பேசி(ஸ்மார்ட்ஃபோன்)பாகங்கள்,மடிக்கணினிகள்/கையடகக் கணினிகளை பெரும்பாலும் சீனாவில் இருந்தே இந்தியா இறக்குமதி செய்கிறது.
    iii. இந்தியாவின் தொலைத்தொடர்பு, மருந்து தயாரிப்பு துறை உள்பட பல முக்கிய துறைகள் சீனாவை சார்ந்துள்ளன.
    iv. இந்தியா-சீனா இடையிலான வர்த்தகப் பற்றாக்குறை ரூ.8.72 லட்சம் கோடியாக உள்ளது. இது இந்தியா-அமெரிக்கா இடையே உள்ள வர்த்தகப் பற்றாக்குறையைவிட மிக அதிகம்.
    v. இந்தியாவின் தோல் பொருள்கள், அறைகலன்கள் இறக்குமதியிலும் சீனாவுக்குப் பெரும் பங்குள்ளது.

4. நடப்பாண்டு மகளிர் ஒருநாள் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் சாம்பியன் கோப்பை வெல்லும் அணிக்கு, இதுவரை இல்லாத வகையில் ரூ.39.55 கோடி ரொக்கப் பரிசாக அறிவிக்கப்பட்டுள்ளது. போட்டிக்கான மொத்த பரிசுத் தொகையும் சுமார் ரூ.122.5 கோடியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
    i. மகளிருக்கான 13-ஆவது உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி இம்மாதம் 30-ஆம் தேதி முதல் நவம்பர் 2-ஆம் தேதி வரை இந்தியா மற்றும் இலங்கையில் நடைபெறவுள்ளது. இதில் இந்தியா உள்பட மொத்தம் 8 அணிகள் இதில் பங்கேற்கின்றன.

5. ஜம்முவில் உள்ள தாவி நதியின் குறுக்கே 12 மணி நேரத்துக்குள்ளாக 110 அடி நீளத்திலான 'பெய்லி' பாலத்தை இந்திய ராணுவம் கட்டமைத்தது.
    i. கடந்த 26-ஆம் தேதி அங்கு பெய்த பலத்த மழை யால் தாவி ஆற்றின் குறுக்கேயுள்ள 4-ஆவது பாலம் சேதமடைந்தது. இதையடுத்து மீட்புப் பணிகளை துரிதப்படுத்தி 1,000–க்கும் மேற்பட்டோரை மீட்கும் நோக்கில் இந்தப் பாலத்தை ராணுவம் விரைவாக கட்டமைத்தது.

6. ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு (எஸ்சிஓ) வளர்ச்சி வங்கி என்ற, நாடுகளின் வளர்ச்சித் திட்டங்களுக்கு கட னுதவி அளிக்கும் புதிய வங்கியை உருவாக்க சீனாவின் தியான்ஜின் நகரில் நடைபெற்ற அந்த அமைப் பின் உச்சி மாநாட்டில் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இதற்கான அறிவிப்பை சீன வெளியுறவு அமைச்சர் வாங் யி திங்கள்கிழமை வெளியிட்டார்.
    i. 'எஸ்சிஓ அமைப்பின் உறுப்பு நாடுகளுடன் கடந்த 10 ஆண் டுகளாக மேற்கொள்ளப்பட்ட ஆலோசனைகளுக்குப் பிறகு, இந்த வளர்ச்சி வங்கியை உரு வாக்கும் சீனாவின் முன்மொழிவுக்கு எஸ்சிஓ அமைப்பு ஒப்புதல் அளித்துள்ளது.
    ii. இந்தப் புதிய வங்கி, ஐரோப்பி ய-ஆசிய பிராந்தியத்தில் சமூக வளர்ச்சி மற்றும் திறனை மேம் படுத்தும். இது உறுப்பு நாடுகள் மட்டுமன்றி

ஒட்டுமொத்த பிராந் தியத்துக்குமான நல்ல விஷயம்' என்றார்.

iii. முன்னதாக, 'எஸ்சிஓ வளர்ச்சி வங்கி உருவாக்கத்தை தீவிரப் படுத்த வேண்டும்' என்று உச்சி மாநாட்டின் தொடக்க உரை யில் உறுப்பு நாடுகளுக்கு சீன அதிபர் ஷி ஜின்பிங் அழைப்பு விடுத்தார். பிரிக்ஸ்' கூட்டமைப்பின் புதிய 5 வளர்ச்சி வங்கி (என்டிபி), ஆசிய முதலீட்டு உள்கட்டமைப்பு வங்கி (ஏஐஐபி) ஆகிய வங்கிகளைப் போல எஸ்சிஓ வளர்ச்சி வங்கி உருவாக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

7. ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு - (எஸ்சிஓ) உச்சி மாநாட்டில் கொண்டுவரப்பட்ட சீனாவின் முக்கியத்துவம் வாய்ந்த 'பிஆர்ஐ' தொழில் வழித்தட திட்டம் தொடர்பான தீர்மானத்தை அங்கீகரிக்க இந்தியா மறுப்பு தெரிவித்தது.

   i. "இந்தத் தீர்மானத்துக்குரஷியா, பெலாரஸ்,ஈரான், கஜகஸ்தான், கிர்கிஸ்தான், பாகிஸ்தான், தஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தான் ஆகிய 8 உறுப்பு நாடுகள் தங்களின் ஆதரவை மறு உறுதி செய்த நிலையில், அமைப்பில் அங்கம் வகிக்கும் இந்தியா மட்டும் ஆதரவளிக்க மறுத்தது.

   ii. முந்தைய எஸ்சிஓ கூட்டங்கள் மற்றும் உச்சி மாநாடுகளிலும் இதே நிலைப்பாட்டை இந்தியா பதிவு செய்தது. பல்வேறு நாடுகளுடன் போக்குவரத்து இணைப்பை ஏற்படுத்தும் வகையில் 'பி.ஆர்ஐ' வழித்தடல திட்டத்தை சீனா முன்னெடுத்து வருகிறது. இந்த வழித்தடத்தின் ஒரு பகுதி பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் வழியாக செல்லும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளதற்கு இந்தியா தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வருகிறது.